O.S.138/2018 நாள் 22.07.2026

பி.வா.சா.1 உமாதேவி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

இந்த நீதிமன்றம் சுயமாக முன்வந்து தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட வழக்கை மறுபடியும் திறந்து தரப்பினரை சேர்ப்பதற்காக போடப்பட்டது என்றால் எனக்குத் தெரியவில்லை. நாங்கள் தாக்கல் செய்த எதிர்கோரிக்கைக்கான வாதியின் பதிலை நான் படித்துப் பார்க்கவில்லை. தாவா சொத்தில் மாடிப்பகுதியில் நான் செலவு செய்து கட்டியதாக சொல்வதற்கு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் அடமானம் வைத்து நகையை மீட்டதற்கான ரசீது தாக்கல் செய்திருக்கிறேன். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும், நான் அதுபோல் செலவு செய்து கட்டவில்லை என்றாலும் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருக்கும்போது housing loan போட்டார் என்று எனக்குத் தெரியும். அது முதல் மாடி கட்டுவதற்காக பெறப்பட்டது என்றால் அந்த பணம் வாங்கப்பட்டது உண்மைதான். அது போதுமானதாக இல்லை என்பதால் எனது நகையை அடமானம் வைத்து மாடி கட்டினார். சாட்சி மீண்டும் லோனில் எடுத்த பணம் கொண்டு தரைதளத்தை சரிசெய்தார்கள் என்றும், முதல் தளம் எனது நகையை வைத்து வந்த பணத்தை வைத்து கட்டினார் என்றும் சொல்கிறார். 2013 – 2014 வருடத்தில் நகையை அடமானம் வைத்து பணத்தைக் கொடுத்தேன். 2013 –2014 ல் தான் கட்டினார்கள். அது தான் ஞாபகம் இருக்கிறது. நான் இந்த வழக்கிற்காக நான் கொடுத்த பணத்தைக் கொண்டு முதல் மாடி கட்டியதாக தவறாக சொல்கிறேன் என்றால்

சரியல்ல. என்னுடைய பணம் கொண்டு கட்டியதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கையில் சொல்லியிருக்கும் தபசில் சொத்து முதல் அயிட்டமும், 2 வது அயிட்டமும் ஒன்று என்றால் சரியல்ல. முதல் அயிட்டம் தரைதளம், 2 வது அயிட்டம் மாடியைக் குறிக்கும், 1, 2 தபசில் சொத்துக்களை தனித்தனியாக நான் காட்டியிருப்பது தவறு என்றாலும், அது ஒரே இடம் என்றாலும் சரியல்ல. தபசில் சொத்தின் கட்டிட மதிப்பு நான் தவறாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 வாதி செந்தில் முத்துகுமாருக்கு அவரது தாயார், சகோதரன் சிவகுமார், சகோதரி மாலதி ஆகியோர் சேர்ந்து எழுதிக் கொடுத்த பாக விடுதலை பத்திரம் என்றால் அது எனக்கு எதிராக செய்யப்பட்ட சதி. அது 1, 2 தபசில் சொத்தைப் பொறுத்து என்றால் சரிதான். அதில் சொத்து தரைதளம், முதல் தளம் இரண்டும் சேர்த்து சொல்லப்பட்டுள்ளது. அதில் சொத்தின் மதிப்பு ரூ.25 லட்சம் என்று சொல்லியுள்ளது. இதை நான் ஏற்க மாட்டேன். மார்க்கெட் மதிப்பை சரிபார்த்து தான் இந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றாலும் நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிர்கோரிக்கையில் 1, 2 தபசில் சொத்துக்களுக்கு தனித்தனியாக ரூ.25 லட்சம் என மதிப்பீடு செய்தது தவறு என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி மாடியில் தட்டுமுட்டு சாமான்களை அடைத்து வைத்திருப்பதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி எந்த தேதியில் இடைஞ்சல் செய்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அவர்கள் இப்போதும் இடைஞ்சல் செய்து கொண்டு தான் இருக்கிறார்கள். வாதி நடைபாதையை இடைஞ்சல் செய்தார் என்று எதிர்கோரிக்கையில்

Uploaded on 22.07.2026

கற்பனையாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கை 2 வது தபசில் சொத்து என் அம்மா பெயரில் இருந்தது என்றால் சரிதான். அந்த சொத்து என் அம்மாவின் தனிப்பட்ட சொத்து என்பதால் வாதி பெயரில் எழுதி கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கை 2 வது தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருக்கிறது என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கையில் 2 வது தபசில் சொத்தை காட்டியிருப்பது தவறு என்றாலும், அதைப் பொறுத்து பரிகாரம் எனக்குக் கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.9 என் அப்பா இறந்த பிறகு எல்.ஐ.சி.யில் அவர் பெற்ற அடமான கடனை மீட்பதற்காக காசோலை மூலமாக செலுத்திய ரசீது என்றாலும் அது தான் வா.சா.ஆ.9 என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் அந்த பணத்தைக் கட்டி இந்த ரசீது வாங்கினோம் என்றால் என்னுடைய விருப்பம் இல்லாமல் அந்த கையெழுத்தை வாங்கினார்கள். நாங்கள் எல்லோரும் ஒப்புக் கொண்டதால் தான் வங்கியில் வா.சா.ஆ.1 ஐ ஒப்படைத்தார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 என் அப்பா பெயரில் உள்ள ஆவணம் என்றால் சரிதான். என் அப்பா ஓய்வூதிய பலனாக பெற்ற பணபலன்கள் அவர் பெற்றிருந்த கடனுக்கும், வீட்டுக்கடனுக்கும், சில்லறை கடனுக்கும் செலவாகிவிட்டது என்றால் சரியல்ல. நான் அதை நன்றாக தெரிந்தே மறுக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் 3 ம் தபசில் சொத்து எனக்குக் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.3 சாமுவேல்ராஜ் என்பவரை எனக்குத் தெரியாது. அப்படி ஒருவர் வந்து வீட்டு வேலை செய்யவில்லை. அவரை எனக்குத் தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன்

என்றாலும் சரியல்ல. என் தகப்பனார் 31.12.2014 ல் இறந்தார். அந்த சமயத்தில் நான் என் கணவருடன் தூத்துக்குடியில் இருந்தேன் என்றால் சரியல்ல. அப்போது நான் ஆறுமுகநேரியில் உள்ள ஒரு அரசுப் பள்ளியில் பணிபுரிந்தேன் என்றால் அங்கு பணிபுரிந்தது உண்மைதான். ஆனால் இங்கிருந்து தான் சென்றேன். என் பிள்ளைகள் படித்தது எல்லாம் இங்கு தான். அதற்கான பள்ளிக்கூட ஆவணங்களை என்னால் தாக்கல் செய்ய முடியும். பி.வா.சா.ஆ.20 வாக்காளர் அடையாளஅட்டையில் தேதி 09.2.2003 என உள்ளது என்பது சரிதான். அப்போது எனக்கு திருமணம் நடைபெறவில்லை. என்னுடைய ஆவணங்கள் அனைத்தும் திருமணம் நடைபெறுவதற்கு முன்னரும், பின்னரும் தற்போதுள்ள முகவரியில் தான் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.17 ல் முகவரியில் கதவு இலக்கம் 18/36 என உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.20 ல் உள்ள கதவு இலக்கம் 36, பி.வா.சா.ஆ.17 ல் உள்ள கதவு இலக்கம் 18/36 என்றால் இரண்டும் ஒரே வீட்டு முகவரி தான். அது பழைய எண், இது புதிய எண். இந்த முகவரியில் எந்த இடத்திலும் நான் மாடியில் குடியிருப்பதாக இல்லை என்றால் நான் குடியிருப்பது மாடியில் தான். ஆனால் விலாசம் அதே தான். சிறுவயது முதல் அந்த முகவரியில் தான் நான் குடியிருக்கிறேன். தபசில் சொத்து மதிப்புகள் தவறு என்றால் சரியல்ல. வழக்கு மூலத்தை உற்பத்தி செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 1வது தபசில் சொத்தைப் பொறுத்து கேட்டிருக்கும் விளம்புகை பரிகாரமும், செயலுறுத்து கட்டளைப் பரிகாரமும், நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமும் எனக்குக் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி

Uploaded on 22.07.2026

செல்லக்கூடிய ஆவணம் என்றால் சரியல்ல. நான் எதிர்கோரிக்கையில் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் எனக்குக் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் வாதிக்குக் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கையை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.